# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2047/22 - 2017 නොවැම්බර් මස 28 වැනි අඟහරුවාදා - 2017.11.28

*2047/22 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான விதிமுறைகள்**

*அரசியலமைப்பின் 155 ஊஊஊ என்ற உறுப்புரையினால் உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களின் பிரகாரம் பொலிஸ் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட விதிமுறைகள்.*

பீ. எச். மனதுங்க,  
தலைவர்,  
தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு,  
கொழும்பு,  
2017, நவெம்பர் 27.

1. இந்த விதிமுறைகள் 2017 ஆம் ஆண்டின் விதிமுறைகள் (பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு எதிராக கிடைக்கும் பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான விதிமுறைகள்) என அழைக்கப்படும்.

2. எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரினால் அல்லது பொலிஸ் சேவையினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆளொருவரினால் பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான விசாரணைப் பிரிவுக்கு (இதனகத்துப் பின்னர் பொ. மு. வி. பி. ) என அழைக்கப்படும் அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மாகாண அலுவலகத்திற்கு (இதனகத்துப் பின்னர் ஆணைக்குழு என அழைக்கப்படும்) முறைப்பாடொன்றைச் செய்து குறித்த விதிமுறைகளுக்கு அமைய பொருத்தமான நிவாரணத்தைப் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்ளலாம்.

3. மேற்குறித்த 2 ஆவது பந்தியின் கீழ் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில், ஆணைக்குழுவினது செயலாளரின் வழிகாட்டலில் பணிப்பாளர், மேலதிகப் பணிப்பாளர், மாகாணப் பணிப்பாளர் அல்லது விசாரணை உத்தியோகத்தர்கள் என ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அதிகாரத்தத்துவம் உரித்தளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவரினால் விசாரிக்கப்படுதல் வேண்டும்.

4. மாகாண அலுவலகத்திற்கு குறிப்பீடு செய்யப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிக்கும் வகையில் உத்தியோகத்தராக ஒவ்வொரு மாகாணத்திற்கும் பணிப்பாளர் ஒருவர் இருத்தல் வேண்டும் அவரினால் ஆணைக்குழுவினது பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிக்கும் விசாரணைப் பிரிவினது பணிப்பாளருக்கு நேரடியாக அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

5. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு எதிராக கிடைத்த பொதுமக்களின் முறைப்பாடொன்று கிடைத்தமை பற்றி உறுதிப்படுத்தும் கடிதமொன்று ஒரு வாரத்திற்குள் தகவுடைய அதிகாரியினால் முறைப்பாட்டாளருக்கு அறியப்படுத்தப்படுதல் வேண்டும்.

*6.* பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு அவசியப்படும் போது, அந்த நோக்கத்திற்காக சுயாதீன அதிகாரிகளை ஆணைக்குழுவினால் நியமிக்க முடியும். பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான விசாரணைப் பிரிவினது பணிப்பாளரின் வழிகாட்டலில் அவர்களினால் அவர்களின் கடமைப் பணிகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*7.* பொலிஸ் கூண்டினுள் தடுத்துவைக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளொருவரை பரிசீலிப்பதற்காக பொலிஸ் நிலையத்திற்கு செல்வதற்கும் மற்றும் அந்த நபரிடம் விசாரிப்பதற்கும், உரிய முறைப்பாடு தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக் கூற்றுக்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் அத்தகைய செயல்கள் தொடர்பில் வேறு எவரேனும் ஆளொருவரினால் செய்யப்படும் முறைப்பாடுகளின் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான விசாரணைப் பிரிவினது பணிப்பாளருக்கு, மேலதிகப் பணிப்பாளருக்கு, மாகாணப் பணிப்பாளருக்கு அல்லது விசாரணை உத்தியோகத்தர்களுக்கு அல்லது அத்தகைய கருமங்களுக்காக நியமிக்கப்படும் ஏனைய உத்தியோகத்தர் ஒருவருக்கு ஆணைக்குழுவினால் அதிகாரத்தத்துவங்கள் உரித்தளிக்கப்படுதல் வேண்டும்.

*8.* பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு தேவைப்படும் ஆவணங்களையும் தகவல்களையும் வெகுவிரைவில் பெற்றுக்கொடுத்து, ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான விசாரணை உத்தியோகத்தர்களுக்கு உதவ வேண்டும் என பொலிஸ் மா அதிபரினால் தனது சகல பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தப்படுதல் வேண்டும்.

*9.* மேற்குறித்த 2ஆவது பந்தியின் கீழ் செய்யப்பட்ட பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் தேவையான அறிக்கைகளையும் ஆவணங்களையும் இரண்டு வாரங்களுக்குள் பெற்றுக்கொடுப்பதனூடாக பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான விசாரணைப் பிரிவினது பணிப்பாளருக்கு, மேலதிகப் பணிப்பாளருக்கு, மாகாணப் பணிப்பாளருக்கு, விசாரணை உத்தியோகத்தர்களுக்கு அல்லது இந்தக் கருமங்களுக்காக நியமிக்கப்பட்ட ஏனைய உத்தியோகத்தர்களுக்கு பதவி அந்தஸ்துகள் பாராது சகல பொலிஸ் உத்தியோகத்தர்களும் உதவ வேண்டும். கேட்கப்படும் ஏதாவதொரு அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் பெற்றுக்கொடுப்பதற்கு முடியாது போனால் அதற்காக காரணத்தைக் குறிப்பிட்டு அந்த உரிய பொலிஸ் உத்தியோகத்தரினால் அத்தகைய கால வரையறையை நீடித்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*10.* மூன்று (03) மாதங்களுக்குள் விசாரணைகளை நிறைவு செய்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆணைக்குழுவினால் முடியுமான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். விசாரணைகளின் முடிவுகள் முறைப்பாட்டாளரினால் கேட்டுக்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனிப்பட்ட ரீதியில் அல்லது மின்னஞ்சல், குறும் செய்தி (SMS), தொலைநகல் அல்லது கடிதம் ஆகியவற்றினூடாக அத்தகைய முடிவுகள் அந்த முறைப்பாட்டாளருக்கு பெற்றுக்கொடுப்படுதல் வேண்டும்.

*11.* பெற்றுக்கொடுக்கப்பட்ட நிவாரணத்தில் முறைப்பாட்டாளர் திருப்தி கொள்ளவில்லை எனில், அந்த விடயம் தொடர்பில் ஒரு மீளாய்வை மேற்கொள்ளும் பொருட்டு அவரினால் பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளருக்கு குறிப்பீடு செய்யப்படலாம். செயலாளரினால் அந்த விடயம் பற்றி மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் பிரகடனப்படுத்தப்படும் தீர்மானம் அறுதி, இறுதித் தீர்மானமாக இருக்கும்.

*12.* விசாரணை செய்யப்பட்டுவரும் பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கான ஏதாவதொரு விடயம் தொடர்பில் இந்த விதிமுறைகள் அமைதிகாக்கும் வேளையில், ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும்.

*13.* பொதுமக்களின் முறைப்பாடு தொடர்பான விசாரணைகளின் போது எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தர் தவறொன்றைப் புரிந்துள்ளார் என நிரூபிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவருக்கு எதிராக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் பொலிஸ் கட்டளைகள் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள திணைக்களக் கட்டளைகள் மற்றும் அரசாங்கத்தின் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*14.* விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் குற்றவியல் வகுதியில் வருகின்ற ஒரு சம்பவம் சாட்சியின் மூலம் வெளிப்பட்டால், அது தொடர்பில் குற்றவியல் நடைமுறைக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் பொருட்டு அந்த விடயம் பொலிஸ் மா அதிபருக்கு குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

*15.* அரசியலமைப்பின் 155 ஊஊஊ உறுப்புரையின் கீழ் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் 2012 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு 2012.08.10 ஆந் திகதிய 1770/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நடைமுறை விதிமுறைகள் (பொதுமக்களின் முறைப்பாடுகள்) அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

*12-391*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.